# கொவிட்-19 பரவல் காலப்பகுதியில் வங்கித்தொழில் நடவடிக்கைகளை எவ்வாறு கொண்டு நடாத்துதல்




**இணைய வங்கி மற்றும் கையடக்கத் தொலைபேசி செயலிகள் போன்ற டிஜிட்டல் தளங்களை இயன்றவரை பயன்படுத்தி வங்கித்தொழிற்பாடுகளை மேற்கொள்ளுதல்**

- கணக்கு மீதியைப் பார்வையிடல்
- வங்கிக் கூற்றுக்களைப் பெறுதல்
- பணத்தைப் பரிமாற்றல் (சொந்தக் கணக்குகள், மூன்றாந் தரப்புக் கணக்குகள், பிற வங்கிக் கணக்குகள்)
- பட்டியல் கொடுப்பனவு (மின்சாரம், நீர், தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி போன்ற பயன்பாட்டுக் கொடுப்பனவுகள்)
- கடனட்டைக் கொடுப்பனவுகள்




**தன்னியக்கக் கூற்றுப்பொறிகள் (ATMs) மற்றும் பணம் வைப்பிலிடும் இயந்திரங்கள் (CDMs) போன்றவற்றைப் பயன்படுத்தல்**

நீங்கள் அருகிலுள்ள லங்கா பே எனப் பெயரிட்டுள்ள பிற வங்கி தன்னியக்கக் கூற்றுப்பொறியைப் பயன்படுத்தி குறைந்த செலவில் பணத்தை மீளப்பெறலாம்

**டிஜிட்டல் தளங்களினூடாக உங்கள் வங்கித்தொழில் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாவிட்டால் மட்டுமே வங்கிக் கிளைகளுக்குச் செல்லவும்**

## நீங்கள் வங்கிக் கிளையொன்றுக்கு செல்லும்போது, பின்பற்ற வேண்டியவை:




- முகக்கவசத்தை முறையாக அணியவும்
- வங்கிக்குள் நுழைவதற்கு முன் உங்கள் கைகளைச் சுத்தம் செய்யுங்கள்
- மேற்பரப்புக்களைத் தொட நேர்ந்தால் உங்கள் கைகளைத் தொற்று நீக்குங்கள்
- படிவங்களை நிரப்புவதற்காக உங்கள் சொந்தப் பேனாவை எடுத்துச் செல்லுங்கள்
- சமூக இடைவெளிகளைப் பேணுங்கள்

**வங்கி வளாகங்களில் நடைமுறையிலுள்ள பாதுகாப்பு ஒழுங்குமுறைப்படுத்தல்களுக்கு இணங்கி ஒழுகுவதுடன் அவற்றுக்கு ஆதரவு கொடுங்கள்**

அத்தியாவசியத் தேவையுடைய நபர்/ நபர்கள் மாத்திரம் வங்கிக்குச் செல்வதை உறுதி செய்வதுடன் மற்றும் உயர் இடர்நேர்வுகளுக்கு உள்ளாகக்கூடிய தனிநபர்கள் (உதாரணம்: மூத்த பிரஜைகள், குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள்) வங்கிக்குச் செல்வதிலிருந்து விலகியிருப்பதை உறுதிசெய்வதற்குத் தேவையான அனைத்து சாத்தியமான வழிமுறைகளையும் மேற்கொள்ளவும்

பின்வரும் சந்தர்ப்பங்களில் வங்கிக் கிளைகளுக்கு வருகை தரவேண்டாம்:

- தடிமல், இருமல் மற்றும் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் உங்களுக்கு காணப்படல் அத்துடன் / அல்லது
- கொவிட்-19 தொற்றியுள்ள நபருடன் நீங்கள் தொடர்புபட்டிருப்பதற்கான ஏதாவது சாத்தியப்பாடுகள் காணப்படுதல்

## மோசடி தொடர்பில் விழிப்பாக இருங்கள்

உங்கள் வங்கிக் கணக்குகள், தனிநபர் அடையாள விபரங்கள் மற்றும் இன்னபிறவற்றைக் கோரும் ஏதேனும் அழைப்புகள், மின்னஞ்சல்கள் அல்லது பிற தொடர்பாடல்கள் தொடர்பில் விழிப்புடனிருப்பதுடன், உங்கள் தகவல்களை அறியப்படாத மூன்றாம் தரப்பினருக்கு வழங்க வேண்டாம். உங்கள் வங்கியைத் தொடர்பு கொண்டு அத்தகைய கோரிக்கைகளின் நம்பகத் தன்மையைச் சரிபார்க்கவும்.

**மேலதிக விபரங்கள்/ அறிவுறுத்தல்கள் மற்றும் உதவிக்கு உங்களுடைய வங்கிகளைத் தொடர்பு கொள்ளுங்கள்**

ஏதேனும் மேலதிக உதவி பின்வரும் திணைக்களத்திடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட முடியும்:
நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் - இலங்கை மத்திய வங்கி
☎ 0112477966 ✉ fcrd@cbsl.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

பணிப்பாளர், வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு -01
☎ 011 2477659 ✉ dbsd@cbsl.lk www.cbsl.gov.lk